# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்



## "அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி" விளக்கம்

### பகுதி 1 - 13/10/2024



வழங்குபவர்

**திரு. லோக. ஆனந்த பாரதி**

# உபதேசக் குறிப்புகள் – பதிப்பு வரலாறு

- ✓ உபதேங்களை நேர் முகமாக/பிறர் சொல்லக் கேட்ட அன்பர்கள் எழுதி வைத்த குறிப்புக்களே முதல்களாகும்.

- ✓ ச.மு. கந்தசாமி பிள்ளை அவர்களது 1924-ஆம் ஆண்டுப் பதிப்பிலும், பிருங்கிமா நகரம் இராமசாமி முதலியாரது 1896- ஆம் ஆண்டுப் பதிப்பிலும் ஓரளவு, ஒருவாறு வெளிவந்தன.

- ✓ குறிப்புகள், முழு வடிவத்திலும், வரன் முறையாகவும், குறிப்புக்கள் முதலியவற்றுடனும் முதல்முதல் வெளிவந்தது ஆ. பாலகிருஷ்ணன் பிள்ளையின் முதற்பதிப்பில்தான் (1932)

# உபதேசக் குறிப்புகள் – பதிப்பு வரலாறு

- ✓ “திருவருட் பிரகாச வள்ளலார் திருவாய் மலர்ந்தருளிய ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள் - சன்மார்க்க ஒழுக்கத் திருநெறி” என்னும் தலைப்பின் கீழ்க் குறித்து வைத்த குறிப்புக் களாகும்.

- ✓ சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைக் குறிப்புகள்

- ✓ சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைச் சிறு குறிப்புகள்

# உபதேசக் குறிப்புகள் – பதிப்பு வரலாறு

- ✓ சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தை தனிக் குறிப்புகள்
- ✓ என மூன்று பகுதிகளாக பிரித்து பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள், தம்முடைய நான்காவது புத்தகத்தில் பதிப்பித்தார்கள்.
- ✓ இப்பிரிவுகளுக்குக் கிடைத்த அன்பர் படிகள் முறையே ஏழு, மூன்று, ஏழு, என்னும் எண்ணினவாம்.
- ✓ பின்னாளில் 1981 இல் - ஊரன் அடிகளார் இந்த மூன்றையும் பொருள் அமைதியின் அடிப்படையில் ஒன்றாக்கி 133 பகுதிகளாக தன் உரைநடைப் பதிப்பில் வெளியிட்டார்கள்

# அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

அண்டம் - உலகம்/பிரபஞ்சம்
பிண்டம் - உடல்கள்
பூர்ண - முழுவதும்
பாவனை - நினைதல்
அனுஷ்டானம்- கடைபிடித்தல்
விதி - ஒழுகும் முறை

அண்டத்தில் உள்ளது போலவே, பிண்டத்திலும் இறைவனின் திருவருள் சத்தி செயல்பட்டு அதி நுட்பமாக விளங்குகின்றது என்பதை உணர்ந்து , பிண்டத்திலேயே இறைவழிபாடு செய்து, கடைபிடித்து வாழும் முறை இவ்வாறு என்பதை பெருமான் இந்த தலைப்பின் கீழ் அன்பர்களுக்கு உபதேசித்துள்ளார்

# அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்கின்ற நாலிடத்திலும் கடவுள் பிரகாசம் உள்ளது.

அதனில் காரியத்தாலுள்ள விபரம்:-

பிண்டத்தில் அகம் ஆன்மா, ஒரு பொருளினது உண்மையையறிதல் ஆன்ம அறிவு.

பிண்டத்தில் அகப்புறம் ஜீவன், ஒரு வஸ்துவின் பிரயோஜனத்தை யறிந்த அறிவே ஜீவ அறிவு.

பிண்டத்தில் புறம் கரணம், ஒரு வஸ்துவின் நாமரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் கரணமாகிய மன அறிவு.

பிண்டத்தில் புறப்புறம் கண் முதலிய இந்திரியங்கள், ஒரு பொருளினது நாம ரூப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக்காணுதல் இந்திரியக்காட்சி, இந்திரிய அறிவு. இதுபோலவே கரணக்காட்சி, ஜீவக்காட்சி, ஆன்மக்காட்சியுமுண்டு.

VALLALAR UNIVERSAL MISSION, USA
INQUIRY OF TRUTH · COMPASSION
சத்விசாரம் · ஜீவகாருண்யம்
வள்ளலார் யூனிவர்சல் மிஷன், அமெரிக்கா

# அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

இதுபோல், அண்டத்தில்

அகம் அக்கினி, அண்டத்தில் அகப்புறம் சூரியன், அண்டத்தில் புறம் சந்திரன், அண்டத்தில் புறப்புறம் நக்ஷத்திரங்கள்.

ஆகவே பிண்டத்தில் நாலிடம் அண்டத்தில் நாலிடம் - ஆக எட்டிடத்திலும் கடவுட் பிரகாசம் காரியத்தாலுள்ளது.

காரணத்தாலுள்ள இடம்:-

*பிண்டத்தில் புருவமத்தி, அண்டத்தில் பரமாகாசம்.*

காரிய காரணமாயுள்ள இடம் நான்கு:-

பிண்டத்தில் விந்து, நாதம். அண்டத்தில் மின்னல், இடி. சர்வயோனியிடத்தும், விந்து விளக்கமாகிய மின்னலிடத்தும், நாத விளக்கமாகிய இடியிடத்தும்;

# அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

விடுபட்டக் குறிப்புகள்:

இல்லாதது பாரொடு விண்ணாய்ப் பரந்ததோர் ஜோதி என்றும், ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாயும்... ...

மேற் குறித்த அகமாகிய ஆன்மபிரகாசமே ஞானசபை, அந்தப் பிரகாசத்துக் குள்ளிருக்கும் பிரகாசம் கடவுள், அந்த உள்ளொளியின் அசைவு நடம் - இதுதான் ஞானாகாசநடன மென்றும் அசைவுற்றதே நடராஜரென்றும் ஆனந்தநடன மென்றும் சொல்லுகின்றது. ஆதலால் ஏமம், கனகம், ரஜிதம், ரௌப்பியம் முதலாகச் சொல்வதில் சூரியனிடத்தில் கனகமும் சசியிடத்தில் ரஜிதமும்......

இதுபோல் பிண்டத்தில்:

ஆன்மாகாசம் பொற்சபையென்றும், ஜீவாகாசம் ரஜிதசபை யென்றும் சொல்லுவது.

==============

ஏமம், கனகம் – பொன், ரஜிதம் – வெள்ளி, ரௌப்பியம் - தாமிரம்

# அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

ஆதலால் மேற்குறித்த இடங்கள் யாவற்றிலும் கடவுள் பூரண இயற்கை விளக்கம் காரியமாயும் காரணமாயும் காரியகாரணமாயும் இருக்கின்றது.

முக்கிய இடங்களாகிய பிண்டத்தில் நாலும் அண்டத்தில் ஐந்தும் ஆகிய 9 இடத்திலும் கடவுள் விளக்கம் விசேஷ முள்ளது.

ஆதலால் நாம் தினம் ஆறு காலத்திலும் மேற் குறித்த பிரகாசமே சபையாகவும் அதன் உள்ளொளியே பதியாகவும் வணங்க வேண்டும்.

எக்காலத்திலும் புருவமத்தியின் கண்ணே நம்முடைய கரணத்தைச் செலுத்த வேண்டும்.

மேற்குறித்த காலங்கள் சூரிய உதயம், உச்சிப்போது, சாயரக்ஷ, மாலை, யாமம், வைகறை - ஆகிய காலங்களில் எல்லாம் வல்ல தலைவனை வணங்குதல் வேண்டும்

# அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

- ✓ கடவுட் பிரகாசம்
- ✓ ஞானசபையும் நடராஜரும்
- ✓ சூரியன்

முதலியன இதன் தொடர்பான சன்மார்க்க சங்க விவகாரத் திருவார்த்தைச் சிறு குறிப்புகள்.

துணை நூல்கள்:

- ✓ பாலகிருஷ்ணன் பிள்ளை பதிப்பு - உபதேசப் பகுதி, நான்காம் புத்தகம்.
- ✓ ஊரன் அடிகள் பதிப்பு. திருஅருட்பா உரைநடை
- ✓ திருஅருட்பா ச.மு.கந்தசாமிப் பிள்ளை பதிப்பு.
- ✓ திருஅருட்பா தெய்வ நிலையப் பதிப்பு.
- ✓ முனைவர் வை நமசிவாயம் - உரைநடை விளக்கம் வள்ளலார் கல்விப் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம். வடலூர்.

# அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி

## ஐயம் தெளிதல்...

# வள்ளல் பெருமானின் உபதேசக் குறிப்புகள்



## "அண்ட பிண்ட பூர்ண பாவன அனுஷ்டான விதி" விளக்கம்

### பகுதி 1 - 13/10/2024



வழங்குபவர்

**திரு. லோக. ஆனந்த பாரதி**